**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.128/2025**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : மாயழகு | Caste | : |
| Father 's Name / Husband Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(11.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நானும் எதிரியும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம். நான் கடந்த 13.12.2024 அன்று மதியம் சுமார் 4.00 மணியளவில் என் மனைவியை பார்த்து அடையாளம் தெரியாத ஒருவர் அசிங்கமாக பேசி சண்டை போட்டுள்ளார். பின்பு இரவு சுமார் 7 மணியளவில் நான் எனது காட்டு வீட்டில் உள்ள வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் சாப்பிட சென்ற போது அடையாளம் தெரியாத ஒரு நபர் என்னை அருவாளால் மிரட்டினார். இருட்டாக இருந்ததால் யார் என்று தெரியவில்லை. **சந்தேகத்தின் அடிப்படையில் எதிரி மீது நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.128/2025**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **செல்வி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **மாயழகு** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(11.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நானும் எதிரியும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம். நான் கடந்த 13.12.2024 அன்று மதியம் சுமார் 4.00 மணியளவில் என்னை பார்த்து அடையாளம் தெரியாத ஒருவர் அசிங்கமாக பேசி சண்டை போட்டார். பின்பு இரவு சுமார் 7 மணியளவில் எனது கணவர் காட்டு வீட்டில் உள்ள வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் சாப்பிட சென்ற போது அடையாளம் தெரியாத ஒரு நபர் அவரை அருவாளால் மிரட்டியுள்ளார். இருட்டாக இருந்ததால் யார் என்று தெரியவில்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.128/2025**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **முருகன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **ராமன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(11.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் கூடக்கோவில் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் செல்வி.கார்த்திகா என்பவரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். அவர்கள் பணி மாறுதலாகி வேறு நிலையத்திற்கு சென்று விட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 16.12.2024ம் தேதி காலை 10.00 மணிக்கு மேற்படி சார்பு ஆய்வாளர் நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும் போது அவரது பார்வைக்கு வைக்கப்பட்ட கூடக்கோவில் மனு ரசிது எண். 503/24 ஐ பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 171/2024 பிரிவுகள் 296(பி),118(1), 351(3) BNS and 4 of TNPHW Act ன் படி வழக்கு பதிவு செய்து புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மற்ற நகல்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். மு**தல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கு கொண்டு அன்றைய தினமே வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 11.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ஆறுமுகம் மற்றும் பாலமுருகன் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும்.** மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரியை 14.12.2024 அன்று 11.00 மணிக்கு டி.புதுப்பட்டியில் உள்ள எதிரியின் வீட்டு அருகே கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். பின்பு இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு இவ்வழக்கில் காயம்பட்டவருக்கு சிகிச்சையளித்து காயச்சான்று வழங்கிய திருமங்கலம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.சிவகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் சார்பு ஆய்வாளர் தனது விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(பி), 118(1), 351(3) BNS and 4 of TNPHW Act ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் கு.வி:**

வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் எனக்கு விசாரணை பற்றி தெரியாது என்றும் பொய்யான தகவல்களை தயார் செய்து எதிரியின் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.